# உள் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

## காவல் துறை
## மானியக் கோரிக்கை எண். 22

## தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை
## மானியக் கோரிக்கை எண். 23

## அறிவிப்புகள்
## 2023 - 2024

# மு.க. ஸ்டாலின்
## முதலமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2023

# காவல் துறை

## I. புதிய உபகரணங்கள் வாங்குதல்

1. **நடுத்தர வகை காவல் நிலையங்கள் / பிரிவுகளுக்காக பல்வகை கையடக்க கணினி (Multi Function Tablets) வழங்கப்படும்**

ஸ்மார்ட் காவலர் (இ – பீட்), பாதுகாப்பு நிர்வாகம் மற்றும் பணியாளர் பட்டியல் படிவம் ஆகியவற்றை திறம்பட செயல்படுத்த நடுத்தர, இலகு மற்றும் புதிய காவல் நிலையங்கள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதியப்படும் அலகுகளுக்கு கூடுதலாக தேவைப்படும் பல்வகை கையடக்க கருவிகள் வழங்கப்படும்.

தற்போது, 332 நடுத்தர காவல் நிலையங்களுக்கு, ஒரு காவல் நிலையத்திற்கு 3 என்ற எண்ணிக்கையில் 996 பல்வகை கையடக்க கருவிகள் ரூபாய் 438.24 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

2. **சென்னை பெருநகர காவல் துறையிலுள்ள பாதுகாப்பு பிரிவுக்கு வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் புதிய கருவிகள் வழங்கப்படும்**

அதிமுக்கிய நபர்கள் / முக்கிய நபர்கள் / பாதுகாக்கப்பட வேண்டிய நபர்களின் பாதுகாப்பிற்காக நாச வேலைகளைத் தடுக்கவும், எளிதில் அணுகுவதை கட்டுப்படுத்தவும் கழிவு செய்யப்பட்ட **வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்து செயலிழக்கச் செய்யும் கருவிகள் ரூபாய்** 274.13 **இலட்சம் செலவில் வாங்கப்படும்.**

3. **சென்னை மாநகரில் 2000 சிசிடிவி கேமராக்கள் நிறுவப்படும்**

பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பிற்காக சிசிடிவி கேமராக்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் சென்னை நகரில் 2000 **சிசிடிவி கேமராக்கள் ரூபாய்** 550.00 **இலட்சம் செலவில் நிறுவப்படும்.**

4. **ஒருங்கிணைந்த வாகன சோதனை மையங்களில் சென்னை மாநகர காவல்துறைக்காக நவீன உபகரணங்கள் வாங்கப்படும் (foldable and moveable barricades with ANPR cameras and imageenhancing software)**

திருட்டு, வழிப்பறி, செயின்பறிப்பு உள்ளிட்ட இதர சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை கையாள ஒருங்கிணைந்த வாகன சோதனை மையங்களில் சென்னை பெருநகர காவல்துறைக்காக தானியங்கி வாகன எண் பதிவு செய்யும் கேமராக்கள் கொண்ட மடிக்க மற்றும் நகர்த்தக்கூடிய தடுப்புகள் (foldable and moveable barricades with ANPR cameras and image enhancing software), மற்றும் உருவத்தை மிகத் தெளிவாகக் காட்டக்கூடிய மென்பொருள் மூலம் கேமராவில் பதிவானதை பகுப்பாய்வு செய்து அதன் மூலம் தெளிவற்ற படங்களின் உருவங்களை கண்டுபிடித்து வீடியோ பதிவுகள் மூலம் வழக்குகளை கண்டுபிடிக்க உதவியாக இருக்கும். இதற்காக ரூபாய் 214.30 **இலட்சம் செலவில் நவீன உபகரணங்கள் வாங்கப்படும்.**

5. **மூன்று வழித்தடங்களில் போக்குவரத்து ஒழுங்குமுறை கண்காணிப்பு மண்டலம் (Traffic Regulation Observation Zone - TROZ) அமைத்தல் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கப்படும்**

கடந்த நிதிநிலை அறிக்கையில் அண்ணாநகரில் மூன்று வழித்தடங்களில் போக்குவரத்து ஒழுங்குமுறை கண்காணிப்பு மண்டலம் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. தற்போது தவறான பாதையில் வாகனம் ஓட்டுதலை கண்டுபிடிக்க மேலும் மூன்று வழித்தடங்களில் 300 தானியங்கி வாகன எண் பதிவு செய்யும் கேமராக்கள் நிறுவவும், மோட்டார் வாகன விதிமீறல்களுக்காக வழக்குகளை பதிவு செய்ய 30 புதிய போக்குவரத்து சமிக்ஞைகளில் **தானியங்கி வாகன எண் பதிவு செய்யும் கேமராக்கள் ரூபாய் 1927.20 இலட்சம் செலவில் வாங்கப்படும்.**

6. **தமிழ்நாட்டிலுள்ள இந்திய காவல் பணி அல்லாத காவல் துணை கண்காணிப்பாளர் (தரம்-1) முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான அதிகாரிகளுக்கு மடிக்கணினி வழங்கப்படும்**

வளர்ந்து வரும் இணையவழி பயன்பாட்டினை கருத்திற்கொண்டும், பொதுமக்களின் குறைகளை தொடர்ந்து கண்காணித்திடவும் இந்திய காவல் பணி அல்லாத காவல் துணை கண்காணிப்பாளர் (தரம்-1) முதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான அதிகாரிகளுக்கு 976 மடிக்கணினிகள் வழங்கப்படவுள்ளன. அதில் முதற்கட்டமாக **ரூபாய் 200 இலட்சம் செலவில் மடிக்கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.**

7. **நுண்ணறிவு பிரிவில் உள்ள காவல் ஆய்வாளர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான அதிகாரிகளுக்கு மடிக்கணினிகள் வழங்கப்படும்**

வளர்ந்து வரும் இணையவழி பயன்பாட்டினை கருத்திற்கொண்டும், சட்டம் ஒழுங்கு நிலவரத்தை கண்காணித்து நுண்தகவல்கள் வழங்கிட ஏதுவாக 247 **மடிக்கணினிகள் நுண்ணறிவு பிரிவிலுள்ள காவல் ஆய்வாளர்கள் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வரையிலான அதிகாரிகளுக்கு ரூபாய் 101 இலட்சம் செலவில் வாங்கப்படும்.**

**8. இணையதள குற்றப்பிரிவு தலைமையகத்திலுள்ள 1930 அழைப்பு மையம் / கட்டுப்பாட்டு அறை விரிவாக்கம் செய்யப்படும்**

இணையதள குற்றங்கள் குறித்த அழைப்புகள் பெருகி வரும் நிலையில் ஏற்கெனவே உள்ள அழைப்பு மையம் / கட்டுப்பாட்டு அறை விரிவாக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. அதன்படி, இம்மையத்தில் உள்ள 8 இருக்கைகளை 15 இருக்கைகளாகவும், புதியதாக கூடுதல் பணியாளர்களை (மூன்றாண்டுகளுக்கு ரூபாய் 928.57 இலட்சம்) ஒப்பளிப்பு **செய்யவும் முதற்கட்டமாக இந்தாண்டிற்கு ரூபாய் 310 இலட்சம் வழங்கப்படும்.**

9. **ஒவ்வொரு காவல் பயிற்சி பள்ளிக்கும் (9) குறைந்தது 10 கணினிகள், அதற்கு தேவையான பாகங்கள், அறைகலன்கள் மற்றும் ஒரு தொகுப்பு புலன் விசாரணை கருவி (Investigation Kit) வழங்கப்படும்**

ஐந்தாவது காவல் ஆணையத்தின் பரிந்துரையின்படி, குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலைபின்னல் முறை (CCTNS) பற்றி பயனுள்ள பயிற்சி அளிக்கப்படுவதற்காக ஒவ்வொரு காவல் பயிற்சி பள்ளிக்கும் (9) குறைந்தது 10 கணினிகள், அதற்கு தேவையான பாகங்கள், அறைகலன்கள் மற்றும் ஒரு தொகுப்பு புலன் விசாரணை கருவி (Investigation Kit) ஆகியவை ரூபாய் 80.10 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**10. சென்னை பெருநகர காவல்துறையில் அனைத்து காவல்நிலையங்களிலும் இதர அலுவலக கட்டிடங்களிலும் தீயணைப்பு கருவிகள் (Fire Extinguishers) நிறுவப்படும்**

காவல்நிலைய வளாகங்களிலும், இதர காவல் அலுவலக வளாகங்களிலும் தீ விபத்துகளைத் தடுத்தல், சொத்துக்கள் சேதம் போன்றவற்றைத் தடுக்க சென்னை பெருநகர காவல்துறையில் அனைத்து காவல்நிலையங்களிலும் இதர அலுவலக கட்டிடங்களிலும் 270 **தீயணைப்பு கருவிகள் ரூபாய் 49.95 இலட்சம் செலவில் வாங்கப்பட்டு நிறுவப்படும்.**

**11. சென்னை பெருநகர காவல்துறையில் மத்திய குற்றப் பிரிவில் புலனாய்வு அதிகாரிகளுக்காக மடிக்கணினிகள் வாங்கப்படும்**

கள புலனாய்வுக்காகவும், சம்பவ இடங்களிலேயே சாட்சிகளை பதிவு செய்து பகுப்பாய்வு செய்யவும், வழக்குகளை விரைந்து தரமாக விசாரிக்கவும் சென்னை பெருநகர காவல்துறையில் மத்திய குற்றப் பிரிவு புலனாய்வு அதிகாரிகளுக்காக 40 **மடிக்கணினிகள் ரூபாய் 24 இலட்சம் செலவில் வாங்கப்படும்.**

**12. சென்னை பெருநகர காவலில் 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள 57 போக்குவரத்து சமிக்ஞைகள் மாற்றப்படும்**

சென்னை பெருநகர காவல்துறையில் 287 சாலைப் போக்குவரத்து சமிக்ஞைகள் உள்ளன. அவற்றில், 57 சமிக்ஞைகள் 10 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானதாகும். கடுமையான தட்பவெட்ப நிலைகளில் அவை நாள் முழுவதும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. எனவே, 10 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள 57 **போக்குவரத்து சமிக்ஞைகள் ரூபாய் 427.50 இலட்சம் செலவில் மாற்றப்படும்.**

13. **குற்றவாளிகளை கைது செய்ய 25 ரிமோட் மூலம் விலங்கிடும் (Remote Restraint Wrap) கருவிகள் வாங்கப்படும்**

குற்றவாளிகளை கைது செய்யும்போது குற்றவாளிகளால் காவலர்கள் தாக்கப்படும் சம்பவங்களைத் தடுக்க, ரிமோட் மூலம் விலங்கிடும் சாதனங்கள் மூலம் குற்றவாளிகளின் மீது பலத்தை பிரயோகிக்காமல் பாதுகாப்பாகவும், தற்காலிகமாகவும் சட்ட ரீதியாகவும் அவர்களை கட்டுப்படுத்தமுடியும். இதற்கென 25 ரிமோட் மூலம் விலங்கிடும் கருவிகள் ரூபாய் 75.07 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

**14. சென்னை பெருநகர காவல்துறையில் துணை ஆணையாளர் மற்றும் அதற்கு மேல் நிலையிலுள்ள அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு மின்சார ஜெனரேட்டர் பொருத்தப்படும்**

வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றங்களின்போது காவல் துறையினரிடையே தொலைத் தொடர்பு இன்றிமையாததாகும். அத்தகைய அவசர காலங்களில் காவல்துறை அதிகாரிகள் தொடர்ந்து தொடர்பில் இருக்க வேண்டும். எனவே, அவசரகால தயார்நிலை திட்டங்களுக்காக சென்னை பெருநகர காவல்துறையில் துணை ஆணையாளர் மற்றும் அதற்கு மேல் நிலையிலுள்ள அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு **மின்சார ஜெனரேட்டர் ரூபாய் 68.28 இலட்சம் செலவில் பொருத்தப்படும்.**

**15. க்ரிப்டோ கரன்சி மோசடியைக் கண்டுபிடிக்க செயின் பகுப்பாய்வு ரீயாக்டர் (Chain Analysis Reactor Tool for Crypto Currency) கருவி வாங்கப்படும்**

நாளுக்கு நாள் க்ரிப்டோ கரன்சி முதலீடு மோசடி பெருகி வரும் வேளையில் சட்ட அமலாக்கத்திற்கு க்ரிப்டோ கரன்சி புலனாய்வு அத்தியாவசியமாகும். தொடர் சங்கிலி சேவைகளை அறுத்து, க்ரிப்டோ கரன்சியின் மூலத்தையும், சேரும் இடத்தையும் கண்டுபிடிக்க இக்கருவி பயன்படுவதால் இவற்றை வாங்க ரூபாய் 100 இலட்சம் ஒப்பளிக்கப்படும்.

**16. குற்ற வழக்குகளை களநிலையில் புலனாய்வு செய்ய காவல் அதிகாரிகளுக்கு 450 பேப்லெட்டுகள் (Phablets) வாங்கப்படும்**

சாட்சிகளின் கூற்றுகளை பதிவு செய்யவும், களநிலையில் வழக்குகளை புலனாய்வு செய்து சாட்சிகளை திரட்டவும் காவல் விசாரணைகளுக்கு இத்தகைய கையடக்க பேப்லெட்டுகள் சிறந்ததொரு கருவியாகும். நாளது தொலைநுட்பத்தின் மூலம் புலன் விசாரணை அதிகாரிகளின் புலனாய்வுத் திறனை மேம்படுத்த இத்தகைய **கையடக்க பேப்லெட்டுகள்** உதவிகரமாக இருப்பதால் அவை **ரூபாய் 112.50 இலட்சம் செலவில் வாங்கப்படும்.**

**17. அதி உயர் அலை (VHF) மற்றும் டிஜிட்டல் நடமாடும் வானொலி (DMR) சாதனங்கள் வாங்கப்படும்**

சென்னை பெருநகர காவல்துறைக்கு 112 VHF Static set, 459 VHF Mobile set, 857 VHF Handheld set ஆகிய சாதனங்கள் துணைப் பொருட்களுடன் **ரூபாய் 736.00 இலட்சம் செலவில் வாங்கப்படும்.**

## II. காவலர் பொதுமக்கள் நல்லுறவு

**18. காவலர் மற்றும் பொதுமக்கள் நல்லுறவை மேம்படுத்தும் விதமாக காவல் நிலையங்களில் சிறப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்**

காவல் நிலையங்களை அணுகும் பொதுமக்களின் வசதிக்காக, முதற்கட்டமாக 250 காவல் நிலையங்களுக்கு தலா ரூபாய் 4 இலட்சம் செலவில் வரவேற்பறை, பார்வையாளர்களுக்கான கழிப்பறைகள், குடிநீர் வசதிகள் மற்றும் காத்திருப்பு கொட்டகைகள் ஆகியவை மொத்தம் ரூபாய் 10 கோடி செலவில் கட்டப்படும்

**19. சென்னை பெருநகரில் இணையதள குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு (Cyber Crime Awareness) ஏற்படுத்தப்படும்**

பொதுமக்களிடையே இணையதள குற்றம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு சென்னை பெருநகரில் குறும்படப் போட்டி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ரூபாய் 25 இலட்சம் செலவில் நடத்தப்படும்.

20. **சென்னை பெருநகரில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த 3 துறை சார்ந்த வல்லுநர்கள் ஈடுபடுத்தப்படுவர்**

சென்னை பெருநகரில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் பொருட்டு, கருத்துருக்கள் தயாரித்தல் / தொழில்நுட்ப மதிப்பீட்டினை அளித்தல் / போக்குவரத்து சம்பந்தமான விதிகளை உருவாக்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள 3 துறை சார்ந்த **வல்லுநர்கள் ஒரு வருட காலத்திற்கு ஈடுபடுத்துவதற்கென ரூபாய் 36 இலட்சம் வழங்கப்படும்.**

21. **முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வசதிக்காக காவல் துறை கட்டடங்களுக்கு மின்தூக்கி வசதிகள் (Lift) அமைக்கப்படும்**

காவல்துறை அலுவலகங்களை அணுகும் முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில் காவல் துறையில் உள்ள 38 கட்டடங்களில், **மின்தூக்கி வசதிகள் ரூபாய் 844 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.**

## III. புதிய முயற்சிகள்

**22. மாநில குற்ற ஆவண காப்பகத்தில் மென்பொருள் வல்லுநர்களின் துணையுடன் மென்பொருள் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டு மையம் (Software Development and Management Centre) அமைத்தல்**

சென்னையில் உள்ள மாநில குற்ற ஆவண காப்பகத்தில் மென்பொருள் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டு மையம் அமைத்து கணினி மயமாக்கப்பட வேண்டிய செயலினங்களை அடையாளம் கண்டு அதற்கான செயலிகளை உருவாக்கி, பராமரிப்பது அவசியமாகிறது. இம்மையத்தில் தகவல் தொழில்நுட்ப திறன் வாய்ந்த காவல் ஆளிநர்களும், மென்பொருள் வல்லுநர்களும் ஈடுபடுத்தப்படுவர். மேலும் இம்மையத்திற்கான உபகரணங்களும் வழங்கப்படும். இதற்கான **மொத்த செலவினம் ரூபாய் 60.89 இலட்சம் ஆகும்.**

**23. பெருநகர சென்னை காவல்துறையில் உள்ள நுண்ணறிவுப் பிரிவில் சமூக ஊடகப் பிரிவு (Social Media Cell) உருவாக்குதல்**

பொதுமக்களின் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும், சமூக ஊடக வெளியில் சட்டம் மற்றும் ஒழுங்கு குறித்து பகிரப்படும் தகவல்களை உடனுக்குடன் திரட்டி மேல்நடவடிக்கை எடுக்கவும் பெருநகர சென்னை காவல்துறையின் நுண்ணறிவுப் பிரிவில் சமூக ஊடகப் பிரிவு ஒன்று ரூபாய் 229.39 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

24. **பெருநகர சென்னை காவல்துறையில் செயற்கை நுண்ணறிவு உரையாடல் திட்டத்தை (Conversational Artificial Intelligence Solution) ChatBot, VoiceBot, Video Chat உள்ளிட்ட செயலிகள் மூலம் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் செயல்படுத்தப்படும்**

செயற்கை நுண்ணறிவு கணினி மென்பொருள் மூலம் பொதுமக்களுடன் உரையாடி மனிதர்களைப் போலவே அவர்களுக்குத் தேவையான தகவல்களை வழங்க ChatBot, VoiceBot, Video Chat மூலம் நேரடியாக மக்களுடன் அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் Video Bot என்ற தொழில்நுட்பத்துடன் கூடிய கணினி இயந்திரங்கள் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் வைக்கப்பட்டு மக்களுக்கு சேவை செய்திட ஏதுவாக ரூபாய் 395 இலட்சம் செலவில் (3 ஆண்டுகளுக்கு) திட்டம் தயாரிக்கப்பட்டு, இவ்வாண்டில் 131.62 இலட்சம் வழங்கப்படும்.

25. **காவல் நிலையங்களுக்கு / காவல் கண்காணிப்பாளர்கள் / மாநகர காவல் ஆணையர்கள் ஆகியோருக்கு சிறப்பான குற்றப்புலனாய்வு, குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் குற்றவாளிகளுக்கு தண்டனைப் பெற்றுத் தருதல் ஆகியவற்றிற்கு சுழற்கேடயம் வழங்கப்படும்**

குற்றப்புலன் விசாரணையை துரிதப்படுத்துவதிலும், குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதிலும் குற்றவாளிகளுக்கு தண்டனைப் பெற்றுத் தருவதிலும் சிறப்பாக பணியாற்றிய காவல் நிலையங்களுக்கு அந்தந்த காவல் கண்காணிப்பாளர் / காவல் ஆணையர் அவர்களால் சுழற்கேடயம் ஒன்று ஒவ்வொரு காலாண்டும் வழங்கப்படும்.

அதேபோல சிறப்பாக செயல்பட்ட மாவட்ட கண்காணிப்பாளர்களுக்கும், காவல் ஆணையாளர்களுக்கும் காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களால் **ஒவ்வொரு காலாண்டும் சுழற்கேடயம் ஒன்று வழங்கப்படும்.**

## IV. புதிய காவல் நிலையங்கள், உட்கோட்டங்கள், பிரிவுகள் உருவாக்குதல் / மறுவரையறை செய்தல்.

26. **தாம்பரம் ஆணையகரத்திற்குட்பட்ட கிளாம்பாக்கம் பேருந்து நிறுத்தத்தில் காவல்நிலையம் ஒன்று அமைக்கப்படும்**

தாம்பரம் ஆணையரகத்திற்குட்பட்ட விரைவில் திறக்கப்படவுள்ள கிளாம்பாக்கம் பேருந்து நிறுத்தத்தின் முக்கியத்துவத்தினை கருதி அங்கே ஒரு புதிய காவல் நிலையம் தேவையான பணியாளர்களுடன் ரூபாய் 655.91 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

**27. ஐந்து புதிய தாலுக்கா காவல் நிலையங்கள் அமைக்கப்படும்**

பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்றும் விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர், கரூர் மாவட்டம் நங்கவரம், காஞ்சிபுரம் மாவட்டம் பொன்னேரிக்கரை, வேலூர் மாவட்டம் பிரம்மபுரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டம் பெரம்பலூர் தாலுக்கா ஆகிய ஐந்து இடங்களில் மிதவகை காவல் நிலையங்கள் தேவையான பணியாளர்களுடன் தலா ரூபாய் 2.58 கோடி என மொத்தம் 12.91 கோடி செலவில் அமைக்கப்படும்.

**28. மூன்று புதிய பெருநகர காவல் நிலையங்கள் அமைக்கப்படும்**

மாநகரங்களில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்றும், சென்னை பெருநகர காவல் பகுதியில் வானகரம், தாம்பரம் காவல் ஆணையரக பகுதியில் மேடவாக்கம் மற்றும் ஆவடி காவல் ஆணையரக பகுதியில் புதூர் ஆகிய இடங்களில் **தலா ரூபாய் 8.35 கோடி என மொத்தம் ரூபாய் 25.44 கோடி செலவில் 3 புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.**

**29. நுண்ணறிவுப் பிரிவில் தீவிரவாதத் தடுப்புப்பிரிவு (Anti-Terrorism Squad) அமைக்கப்படும்**

தீவிரவாத நடவடிக்கைகளை திறமையாக எதிர்கொள்வதற்காக மாநில நுண்ணறிவுப்பிரிவில் புதிதாக **தீவிரவாத தடுப்புப்பிரிவு (Anti Terrorism Squad) ஒன்று 383 பணியாளர்களை கொண்டு ரூபாய் 5751.61 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.**

**30. சேலம் மாவட்டத்தில் உள்ள ஆட்டையாம்பட்டி மற்றும் காரிப்பட்டி காவல் நிலையங்கள் சேலம் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும்**

சேலம் மாவட்டத்தில் உள்ள ஆட்டையாம்பட்டி மற்றும் காரிப்பட்டி காவல் நிலையங்கள் நிருவாக வசதிக்காக சேலம் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும். இதன்மூலம் சேலம் மாநகர காவல் எல்லை விரிவுபடுத்தப்படுவதோடு மக்களுக்கு சிறந்த காவல் சேவை வழங்க இயலும்.

**31. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள துடியலூர், கவுண்டம்பாளையம் மற்றும் வடவள்ளி காவல் நிலையங்கள் கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும்**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள துடியலூர், கவுண்டம்பாளையம் மற்றும் வடவள்ளி காவல் நிலையங்கள் நிருவாக வசதிக்காக கோயம்புத்தூர் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும். இதன்மூலம் கோயம்புத்தூர் மாநகர காவல் எல்லை விரிவுபடுத்தப்படுவதோடு மக்களுக்கு சிறந்த காவல் சேவை வழங்க இயலும்.

**32. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மங்கலம் காவல் நிலையம் திருப்பூர் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும்**

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மங்கலம் காவல் நிலையத்தை நிருவாக வசதிக்காக திருப்பூர் மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும். இதன்மூலம் திருப்பூர் மாநகர காவல் ஆணையரகத்தின் எல்லை விரிவுபடுத்தப்படுவதோடு மக்களுக்கு சிறந்த காவல் சேவை வழங்க இயலும்.

**33. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி மற்றும் திருப்பாலைவனம் காவல் நிலையங்கள் ஆவடி மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும்**

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொன்னேரி மற்றும் திருப்பாலைவனம் காவல் நிலையங்கள் நிருவாக வசதிக்காக ஆவடி மாநகர காவல் ஆணையரகத்துடன் இணைக்கப்படும். ஆவடி மாநகர காவல் ஆணையரகத்தின் எல்லை விரிவுபடுத்தப்படுவதோடு மக்களுக்கு சிறந்த காவல் சேவை வழங்க இயலும்.

**34. மூன்று புதிய காவல் உட்கோட்டங்கள் உருவாக்கப்படும்**

காவல் துறையில் நிருவாக காரணங்களுக்காகவும், பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்றும் வேலூர் மாவட்டத்தில் அணைக்கட்டு காவல் உட்கோட்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டம் காவல் உட்கோட்டம் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் விக்கிரவாண்டி காவல் உட்கோட்டம் ஆகிய **மூன்று புதிய காவல் உட்கோட்டங்கள் தலா ரூபாய் 67.60 இலட்சம் என மொத்தம் ரூபாய் 2.03 கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.** இதன்மூலம் மக்களுக்கு சிறந்த காவல் சேவையை வழங்க இயலும்.

## V. புதிய கட்டடங்கள் கட்டுதல்.

**35. தென்காசி மாவட்டத்திலுள்ள புளியறை காவல்நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்படும்**

தென்காசி மாவட்டத்திலுள்ள புளியறை காவல் நிலையத்திற்கான கட்டிடம் 1987 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே, பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய கட்டிடம் ஒன்று ரூபாய் 161.59 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**36. இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடி காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்**

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடி காவல் நிலையத்திற்கான கட்டிடம் 1984 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே, பழைய கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் ஒன்று ரூபாய் 212.00 இலட்சம் செலவில் கட்டப்படும்.

37. **தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாச்சியார்கோவில் காவல்நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்**

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நாச்சியார்கோவில் காவல் நிலையம் 1985 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. எனவே பழைய கட்டடத்தை இடித்துவிட்டு புதிய கட்டடம் ஒன்று ரூபாய் 265.96 இலட்சம் செலவில் கட்டப்படும்.

38. **தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சோழபுரம் காவல்நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்**

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சோழபுரம் காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால், ரூபாய் 185.63 லட்சம் செலவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும்.

39. **தாம்பரம் மாநகரம் பெரும்பாக்கம் காவல்நிலையத்திற்கு புதிய கட்டடம் ஒன்று கட்டப்படும்**

தற்போது தாம்பரம் மாநகரம் – டி-17 பெரும்பாக்கம் காவல் நிலையம் வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் உள்ள கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்காவல் நிலையத்திற்கென சொந்தமான நிலம் உள்ளது. அவ்விடத்தில் **ரூ. 185.63 இலட்சம் செலவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும்.**

40. **தாம்பரம் மாநகரம் ஓட்டேரி காவல்நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்**

தாம்பரம் மாநகரம் – டி 7 ஓட்டேரி காவல் நிலையத்திற்கென காவல்துறைக்கு சொந்தமான நிலம் உள்ளது. அவ்விடத்தில் இக்காவல் நிலையத்திற்கு ரூபாய் 215 இலட்சம் செலவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்படும்.

**41. கடலூர் மாவட்டம் திருப்பாதிரிபுலியூரில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் புதிதாகக் கட்டப்படும்**

கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப்புலியூர் காவல் துணை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு 2002 முதல் கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் இயங்கி வருகிறது. எனவே, அங்கு காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் ஒன்று **ரூபாய் 186.49 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்படும்.**

**42. சேலம் மாநகர ஆயுதப் படைக்கு அன்னதானப்பட்டியில் மோப்பநாய் கூடம் கட்டப்படும்**

சேலம் மாநகர ஆயுதப்படைக்கு அன்னதானப்பட்டியில் மோப்ப நாய் கூடம் Dog Kennel) ஒன்று **ரூபாய் 133.35 இலட்சம் செலவில் கட்டப்படும்.**

**43. 137 காவல் நிலைய கட்டிடங்கள் புனரமைக்கப்படும்**

காவல் நிலையங்களுக்கு வந்து செல்லும் பொதுமக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தி தரவும், அங்கு பணிபுரியும் காவலர்களுக்கு நல்ல சூழலை உருவாக்கவும், மாநிலத்திலுள்ள 137 காவல் நிலையக் கட்டடங்கள் **ரூபாய் 10 கோடி செலவில் புனரமைக்கப்படும்.**

## VI. புதிய காவல் வாகனங்கள் வாங்குதல்

44. **கழிவுசெய்யப்பட்ட காவல்துறை வாகனங்களுக்கு பதிலாக ரோந்து பணிகளை மேற்கொள்ள 200 புதிய இரு சக்கர வாகனங்கள் வழங்கப்படும்**

உதவி காவல் ஆய்வாளர்கள் ரோந்துப் பணிகளை மேற்கொள்வதற்கு இருசக்கர வாகனங்களின் பயன்பாடு மிகவும் இன்றியமையாததாகும். ஆகவே அவர்களின் பயன்பாட்டிற்காக 200 புதிய இருசக்கர வாகனங்கள் ரூபாய் 200 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

**45. கழிவு செய்யப்பட்ட காவல்துறை ஊர்திகளுக்கு பதிலாக 283 புதிய வாகனங்கள் வழங்கப்படும்**

மாநிலத்திலுள்ள காவல்துறை அதிகாரிகளுக்கு முக்கியமாக, சரக எல்லைகளுக்குட்பட்ட மிக முக்கிய பிரமுகர்களின் வழிக்காவல் பணி, சட்டம் மற்றும் ஒழுங்கு சம்பவங்கள், குற்றங்களைத் தடுப்பது மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது உள்ளிட்ட பல்வேறு முனைகளில் காவல்துறையின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு, கழிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு ஈடாக 283 நான்கு சக்கர வாகனங்கள் ரூபாய் 28 கோடி செலவில் வாங்கப்படும்.

**46. சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறைக்கு 5 நான்கு சக்கர இழுவை வாகனங்கள் மற்றும் 5 இருசக்கர இழுவை வாகனங்கள் வாங்கப்படும்**

**சென்னை பெருநகரில் அதிகரித்து வரும் வாகனப் பெருக்கத்தின் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இப்போக்குவரத்து நெரிசலை நெறிப்படுத்திட 5 நான்கு சக்கர இழுவை வாகனங்கள் மற்றும் 5 இருசக்கர இழுவை வாகனங்கள் ரூபாய் 200 இலட்சம் செலவில் வாங்கப்படும்.**

## VII. புதிய பதவிகள் உருவாக்குதல்.

47. தளவாய் (சிறு ஆயுதங்கள்) (Commandant, Small Arms) பதவி காவல்துறை துணைத்தலைவர் (சிறு ஆயுதங்கள்) பதவியாக தரம் உயர்த்தப்படும்

இந்திய காவல் பணி சாராத அலுவலர்களுக்கு பதவி உயர்வு வாய்ப்பு அளிக்கும் விதமாக, தளவாய் (சிறு ஆயுதங்கள்) பதவி காவல் துறை துணைத் தலைவர் தரத்திற்கு உயர்த்தப்படும்.

48. தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை தலைமையிடத்தில் உள்ள மண்டல காவல் துணை கண்காணிப்பாளர் பணியிடங்கள் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதவியாக தரம் உயர்த்தப்படும்

திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை தலைமை இடங்களில் உள்ள மண்டல காவல் துணை கண்காணிப்பாளர் (4) பதவிகள் மண்டல கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதவிகளாக ரூபாய் 4.59 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்படும்.

49. **நுண்ணறிவுப் பிரிவிற்கு கூடுதல் தொழில்நுட்பப் பணியாளர்கள் ஒதுக்கீடு செய்யப்படுவர்**

நுண்ணறிவுப் பிரிவில் தொழில் நுட்பப் பணிகளை மேற்கொள்ள ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்) -1, உதவி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பம்)-14 ஆகியோர் கூடுதலாக **ரூபாய் 201.33 இலட்சம் செலவில் ஒதுக்கீடு செய்யப்படுவர்.**

50. **தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்திற்கு இரண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் (தலைமையகம் மற்றும் வெளியிடம்) பணியிடங்கள் உருவாக்கப்படும்**

ஐந்தாவது காவல் ஆணையத்தின் பரிந்துரையின்படி தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்திற்கு இரண்டு கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் (தலைமையகம் மற்றும் வெளியிடம்) பணியிடங்கள் **ரூபாய் 31.80 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.**

**51. மத்திய குற்றப்பிரிவிற்கும் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன்கள் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் (TNPID Act) பதிவு செய்யப்படும் வழக்குகளை கையாள்வதற்கும் தனிப்பிரிவை உருவாக்கி கூடுதல் காவல் பணியாளர்களை நியமித்தல்**

மத்திய குற்றப்பிரிவு திறம்பட செயலாற்ற வேண்டி காவல் பணியாளர்களின் எண்ணிக்கையை 224-ஆக உயர்த்தவும், தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன்கள் பாதுகாப்பு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை கையாளவும் தனிப்பிரிவு ஒன்று ரூபாய் 2711.78 இலட்சம் செலவில் கூடுதல் காவல் பணியாளர்களுடன் உருவாக்கப்படும்.

**52. மாவட்ட குற்றப்பிரிவு / மாநகர குற்றப்பிரிவு ஆகிய பிரிவுகளை பலப்படுத்தப்படும் பொருட்டு தீவிர குற்றத்தடுப்பு பிரிவு ஒன்றிணைக்கப்படும்**

புகார்களுக்கு விரைவாக தீர்வுகாணவும், புலன்விசாரணையின் தரத்தை உயர்த்தவும் மாவட்ட குற்றப்பிரிவு / மாநகர குற்றப்பிரிவு ஆகிய பிரிவுகளை பலப்படுத்தவும், தீவிர குற்றத்தடுப்பு பிரிவின் 24 குழுக்கள் ஒன்றிணைக்கப்படும்.

## VIII. நிதி அதிகாரங்களை மாற்றியமைத்தல் விதிகள் / ஒழுங்குமுறைகள் திருத்தம் செய்தல்.

53. காவலர் பயிற்சி கல்லூரியில் பணியாற்றும் அதிகாரபூர்வ விரிவுரையாளர் மற்றும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியம் (Honorarium) உயர்த்தி வழங்கப்படும்

| விவரம் | தற்போதைய மதிப்பூதியம் | உயர்த்தப்படும் மதிப்பூதியம் |
|---|---|---|
| கௌரவ விரிவுரையாளர் மதிப்பூதியம் | ஒரு மணி நேரத்திற்கு ரூ.250/- | ஒரு மணி நேரத்திற்கு ரூ.1,000/- |
| கௌரவ விரிவுரையாளரின் போக்குவரத்து செலவினம் | ரூ.100/- | ரூ.250/- |
| அதிகாரபூர்வ விரிவுரையாளர் மதிப்பூதியம் | ஒரு மணி நேரத்திற்கு ரூ.100/- | ஒரு மணி நேரத்திற்கு ரூ.500/- |

54. காவலர் பயிற்சி கல்லூரி காவல் அதிகாரிகளின் நிதி அதிகார வரம்பினை தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்திற்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்

| பதவி (காவல் பயிற்சி கல்லூரி) | நிதி வரம்பு |
|---|---|
| காவல் கண்காணிப்பாளர் | ரூ.10,000/- |
| காவல்துறை துணைத் தலைவர் | ரூ.20,000/- |
| காவல்துறை தலைவர் | ரூ.40,000/- |
| கூடுதல் காவல்துறை இயக்குநர் | ரூ.40,000-க்கு மேல் |

55. **ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளான காவல்துறையினரின் மேல்முறையீட்டு மனுக்கள் மீது விரைந்து தீர்வு காண காவல்துறை தலைவர் / கூடுதல் காவல் ஆணையாளர் ஆகியோருக்கு அதிகாரம் வழங்கப்படும்**

**அ)** மாவட்ட காவல் துறையில் பணியாற்றும் சார்பு ஆய்வாளர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல் துறையினரின் மேல்முறையீட்டு மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தற்போது கூடுதல் காவல்துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) வசம் உள்ளது. **இவ்வதிகாரம் மண்டல காவல்துறை தலைவர் அவர்களுக்கு வழங்கப்படும்**

**ஆ)** சிறப்பு பிரிவுகளில் பணியாற்றும் சார்பு ஆய்வாளர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல்துறையினரின் மேல்முறையீட்டு மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் **அந்தந்த காவல்துறை தலைவர் அவர்களுக்கு வழங்கப்படும்.**

இ) சென்னை, ஆவடி மற்றும் தாம்பரம் மாநகர காவல் ஆணையரகங்களில் பணியாற்றும் சார்பு ஆய்வாளர் முதல் ஆய்வாளர் வரையிலான காவல் துறையினரின் மேல்முறையீட்டு மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் தற்போது கூடுதல் காவல்துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) வசம் உள்ளது. இவ்வதிகாரம் **அந்தந்த மாநகர கூடுதல் காவல் ஆணையாளர் அவர்களுக்கு வழங்கப்படும்.**

**56. அரசு காவல் வாகனங்களுக்கு சிறிய அளவிலான பழுது நீக்கம் (petty & minor repairs) செய்வதற்கு தளவாய்களுக்கான நிதி வரம்பு உயர்த்தி வழங்கப்படும்**

கடந்த 2000 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலுள்ள தளவாய்களுக்கு வழங்கப்பட்ட சிறு அளவிலான பழுது நீக்கங்களுக்கான நிதி அதிகார வரம்பு மறு ஆய்வு செய்யப்பட்டு பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுகிறது.

| வகைப்பாடு | இலகுரக வாகனங்கள் | | கனரக வாகனங்கள் | |
|---|---|---|---|---|
| | தற்போதைய வரம்பு (ரூ.) | உயர்த்தப் படும் வரம்பு (ரூ.) | தற்போதைய வரம்பு (ரூ.) | உயர்த்தப் படும் வரம்பு (ரூ.) |
| பழுது நீக்கம் | 400 | 600 | 600 | 1200 |
| மோட்டார் பழுது நீக்கம் | 1500 | 5000 | 3150 | 10,000 |
| டயர் புதுப்பித்தல் | 900 | - | 2250 | 5,000 |

**57. அரசு காவல் வாகனங்களுக்கு பெரிய அளவிலான பழுது நீக்கம் செய்வதற்கு தளவாய் முதல் காவல்துறை இயக்குநர் வரையிலான அதிகாரிகளின் நிதி வரம்பு உயர்த்தி வழங்கப்படும்**

கடந்த 2010 ஆம் ஆண்டு தளவாய் முதல் காவல்துறை இயக்குநர் வரையிலான அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட பெரிய அளவிலான பழுது நீக்கங்களுக்கான நிதி அதிகார வரம்பினை மறு ஆய்வு செய்யப்பட்டு பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுகிறது.

| பதவி | தற்போதைய வரம்பு (ரூ.) | உயர்த்தப்படும் வரம்பு (ரூ.) |
|---|---|---|
| காவல்துறை இயக்குநர் | 1,00,000/- | 1,50,000/- |
| கூடுதல் காவல்துறை இயக்குநர் | 1,00,000/- | 1,25,000/ |
| காவல்துறை தலைவர் | 75,000/- | 1,00,000/- |
| காவல்துறை துணைத் தலைவர் | 40,000/- | 75,000/ |
| தளவாய் / காவல் கண்காணிப்பாளர் | 20,000/- | 50,000/- |

58. **புலன் விசாரணையின் போது தனியார் வாகனங்களை ஈடுபடுத்திக் கொள்ளவும், அவசரகால செலவினங்களை மேற்கொள்ளவும் ஒவ்வொரு அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கும் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படும்**

போக்சோ வழக்கு மற்றும் பாலியல் வன்கொடுமை வழக்குகளை கையாளும் போது அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அதில் பாதிக்கப்பட்டோரின் பாதுகாப்புக்கருதி தனியார் வாகனங்களை பயன்படுத்தி மருத்துவமனை அல்லது நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்ல ஏதுவாக, **தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.** தற்போது இதற்கென எந்த வாகனமும் ஒப்பளிக்கப்படவில்லை. காவல் நிலைய வாகனமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## IX. காவலர் நலன்

**59. காவலர்களுக்கு சீருடை மற்றும் இதர பொருட்கள் கொள்முதல் செய்து வழங்குவதற்கு பதிலாக சீருடைப்படி (Uniform Allowance) ரூ.4,500/- வழங்கப்படும்**

தற்போது காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான பணியாளர்களுக்கு வருடந்தோறும் சீருடைக்கான துணி சிறைத்துறையிடமிருந்தும், இதர பொருட்கள் காவல் தலைமையகத்திலிருந்தும் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. அதற்குப் பதிலாக ரூபாய் 45 கோடி செலவில் இப்பணியாளர்களுக்கு **ஆண்டுதோறும் ரூ.4,500/- சீருடைப்படியாக வழங்கப்படும்.**

**60. காவலர் முதல் தலைமைக் காவலர்/சிறப்பு உதவி ஆய்வாளர் வரையிலான காவல் பணியாளர்களுக்கு எரிபொருள் படி (Fuel Allowance) உயர்த்தி வழங்கப்படும்**

காவலர், தலைமைக் காவலர் / சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் வரையிலான பணியாளர்களுக்கு தற்போது எரிபொருள் படியாக 5 லிட்டர் பெட்ரோலுக்கு ரூ.370/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. எரிபொருள் விலை உயர்வினை கருத்திற்கொண்டு எரிபொருள் படி **மாதம் ஒன்றுக்கு ரூ.515/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

**61. ஆவடி மற்றும் தாம்பரம் மாநகர காவலர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.300/- வீதம் உணவுப்படி வழங்கப்படும்**

சென்னை மாநகர காவலர்களுக்கு வழங்கப்படுவதைப் போலவே ஆவடி **மற்றும் தாம்பரம் மாநகர காவலர்களுக்கும் நாளொன்றுக்கு ரூபாய் 300 வீதம் மாதந்தோறும். அதிகபட்சம் 26 நாட்களுக்கு, உணவுப்படி வழங்கப்படும்** இதற்காக ஆவடியைப் பொறுத்தளவில் ரூபாய் 10.21 கோடியும், தாம்பரத்தை பொறுத்தளவில் ரூபாய் 10.49 கோடியும் செலவாகும்.

**62. ஐந்தாவது காவல் ஆணைய பரிந்துரையின்படி அனைத்து காவல் உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் துணை காவல் கண்காணிப்பாளர்களுக்கு 5 வருடத்திற்கு ஒருமுறை ஒரு வார காலத்திற்கு பணியிடைப் பயிற்சி வழக்கப்படும்**

ஐந்தாவது காவல் ஆணைய பரிந்துரையின்படி அனைத்து காவல் உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் துணை காவல் கண்காணிப்பாளர்களுக்கு 5 வருடத்திற்கு ஒருமுறை ஒரு வார காலத்திற்கு பணியிடைப் பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சி இப்பணியாளர்களின் தரத்தினை மேம்படுத்திட உதவும்.

**63. அனைத்து தமிழ்நாடு சிறப்பு காவல் அணிகளில் பணியாற்றும் காவலர்களுக்கு வார விடுமுறை அளிக்கப்படும்**

காவல் துறையில் மற்றப்பிரிவுகளில் உள்ள காவல் பணியாளர்களைப் போலவே தமிழ்நாடு **சிறப்பு காவல் அணிகளில் பணியாற்றும் காவலர்களுக்கும் வார விடுமுறை அளிக்கப்படும்.**

**64. உயர் பதவிகளில் உள்ள காவல் துறை அதிகாரிகள் (துணை காவல் கண்காணிப்பாளர் முதல் காவல்துறை இயக்குநர் வரை) வழங்கும் பண வெகுமதி (money reward) வழங்கும் தொகையை இருமடங்காக உயர்த்தி வழங்குதல்**

ஐந்தாவது காவல் ஆணைய பரிந்துரையின்படி, தனிப்பட்ட காவலருக்கும், காவலர் குழு அளவிலும் துணை காவல் கண்காணிப்பாளர் முதல் காவல்துறை இயக்குநர் வரையிலான காவல் உயர் அதிகாரிகள் பண வெகுமதியினை வழங்கி வருகின்றனர். காவல்துறையினர் மேலும் சிறப்பாக பணியாற்றிட அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பண வெகுமதிக்கான வரம்பு பின்வருமாறு இரு மடங்காக உயர்த்தி வழங்கப்படும்.

| பதவியின் பெயர் | தற்போதைய நிதி வரம்பு | | உயர்த்தப்படும் நிதி வரம்பு | |
|---|---|---|---|---|
| | குழு ஒன்றுக்கு (ரூ.) | நபர் ஒருவருக்கு (ரூ.) | நபர் ஒருவருக்கு (ரூ.) | குழு ஒன்றுக்கு (ரூ.) |
| காவல்துறை இயக்குநர் / கூடுதல் காவல்துறை இயக்குநர் | 1000 | 10,000/- | 2000 | 20,000 |
| காவல்துறை துணைத் தலைவர் | 500 | 5,000/- | 1000 | 10,000 |
| காவல் கண்காணிப் பாளர் | 600 | 3,000/- | 1,200 | 6,000 |
| துணை காவல் கண்காணிப் பாளர் | 100 | 1000/- | 200 | 2000 |

65. பெருநகர சென்னை காவல்துறையின் ஆயுதப்படை பிரிவில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் உணவுப்படி ரூ.20-லிருந்து ரூ.40-ஆக உயர்த்தி வழங்கப்படும்

தற்போது பெருநகர சென்னை காவல்துறையில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகளுக்கு நாள் ஒன்றுக்கு உணவுப்படியாக ரூ.30/- (அரசு நிதி – ரூ.20 மற்றும் பெற்றோர் நிதி – ரூ.10) வழங்கப்பட்டு வருகிறது. குழந்தைகளின் நலன் கருதி, ஊட்டச்சத்துமிக்க உணவு வழங்குவதற்கான உணவுப்படி ரூபாய் 60-ஆக (அரசு நிதி – ரூபாய் 40 மற்றும் பெற்றோர் நிதி – ரூபாய் 20) உயர்த்தி வழங்கப்படும்.

66. **காவலர்களின் குழந்தைகளுக்கு சிறப்பு கல்வி உதவித்தொகை மற்றும் பரிசுகள் வழங்குதல்**

அ) சிறப்பு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கையை 100-லிருந்து 200 ஆக அதிகரித்தல்

ஆ) கல்வி பரிசுகள் வழங்கும் திட்ட நிதியை இரட்டிப்பாக்குதல்

காவலர்களின் குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் மூலம் தற்போது 100 மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதம் 4 வருடங்களுக்கு வழங்கப்படுவது. எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, 200 **மாணவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும்.** இது தவிர கல்விப் பரிசுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் **பரிசுத் தொகை இரட்டிப்பாக்கப்படும்.** இதற்கு கூடுதலாக தேவைப்படும் செலவினம் ரூபாய் 176.58 இலட்சம் ஆகும்.

67. **காவலர் அங்காடி வசதியை ஊர்க் காவல்படையினருக்கும் விரிவு படுத்தப்படுதல்**

காவலர் அங்காடி வசதியை தற்போது மாநிலத்திலுள்ள அனைத்து காவல் பணியாளர்களும் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வசதியின் பயன்பாட்டினை கருத்தில் கொண்டு இத்திட்டம் ஊர்க்காவல் படையினருக்கும் விரிவுப்படுத்தப்படும்.

68. **காவலர் மருத்துவமனை வசதி ஊர்க்காவல் படையினருக்கும் விரிவு படுத்தப்படுதல்**

மாநிலத்தில் பல இடங்களில் காவலர்களுக்கென மருத்துவமனைகள் அனைத்து வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இவ்வசதி ஊர்க்காவல் படையினருக்கும் விரிவுப்படுத்தப்படும்.

69. **போதைப் பொருள் நுண்ணறிவுப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறைக்கு ரூபாய் 50 லட்சம் சுழல் நிதி வழங்கப்படும்**

போதைப்பொருள் மற்றும் மனமயக்கப் மருந்துகள் சட்டம் 1985-ன்கீழ், பறிமுதல் செய்யும் இனங்களில் காவல்துறை அதிகாரிகள் / ஆளினர்கள் / தகவல் தெரிவிப்பவர்களுக்கு வெகுமதி வழங்கிட ஏதுவாக ரூபாய் 50 லட்சம் சுழல் நிதி வழங்கப்படும்.

70. **சென்னையில் ஆலந்தூர் மற்றும் கொண்டித்தோப்பில் உள்ள காவல் குடியிருப்புகளில் உடற்பயிற்சிக்கூடம், நூலகம் மற்றும் கல்வி மைய வசதிகள் ஏற்படுத்தப்படும்**

காவலர்களின் நலனை கருத்திற்கொண்டு சென்னையிலுள்ள ஆலந்தூர் மற்றும் கொண்டித்தோப்பில் உள்ள காவலர்களின் குழந்தைகளை கல்வி மற்றும் விளையாட்டில் வழிநடத்த உடற்பயிற்சிக்கூடம், நூலகம் மற்றும் கல்வி மையம் போன்ற வசதிகள் ரூபாய் 800 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

71. **சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் 200 பெண் காவலர்கள் தங்கும் வகையில் மகளிர் காவலர் விடுதி ஏற்படுத்தப்படும்**

தமிழக காவல்துறையில் மகளிரின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு ஏற்கெனவே அறிவித்தபடி, **சிந்தாதிரிப்பேட்டையில் 200 பெண் காவலர்கள் தங்கும் வகையில் மகளிர் காவலர் விடுதி ரூபாய் 1047 இலட்சம் செலவில் கட்டப்படும்.** இவ்வசதி, பெண்காவலர்கள் சென்னை மாநகருக்கு பணியிட மாறுதல் பெற்று வரும்போதெல்லாம், அவர்களுக்கு அரசு குடியிருப்புகள் கிடைக்கும்வரை அல்லது சொந்தமாக வாடகைக்கு தங்கும் விடுதியை ஏற்பாடு செய்யும் வரை தங்கும் இடமாக பயன்படுத்தப்படும்.

## X. பல்வகை

72. **மோப்ப நாய்கள் / மோப்ப நாய்களை கையாள்பவர்களுக்கு வழங்கப்படும் உணவு, பராமரித்தல் மற்றும் தடுப்பூசிக்கான (feeding, grooming & vaccination) படி உயர்த்தப்படும்**

i. ஒரு நாளைக்கு ஒரு மோப்ப நாய்க்கு வழங்கப்படும் உணவுப் படி ரூ. 200/- லிருந்து ரூ. 300/- ஆக உயர்த்தப்படும்.

ii. பணியிலுள்ள மோப்ப நாய்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் பராமரித்தல் படி ரூ.300/-லிருந்து ரூ.1,100/- ஆகவும், பணியிலிருந்து ஓய்வுபெற்ற மோப்ப நாய்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் பராமரித்தல் படி ரூ.200/- லிருந்து ரூ.1,100/- ஆகவும் உயர்த்தப்படும்.

iii. மோப்ப நாய்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசிக்கான படி ரூ.950/- லிருந்து ரூ.2,030/- ஆகவும் (முதல் ஆண்டு), இரண்டாம் ஆண்டு முதற்கொண்டு ரூ.450/- லிருந்து ரூ.740/- ஆக உயர்த்தப்படும்.

மோப்ப நாய்களை கையாள்பவர்களுக்கான தடுப்பூசிப்படி ரூ.750/- லிருந்து ரூ.1,050/- ஆகவும் (முதல் ஆண்டு), இரண்டாம் ஆண்டு முதற்கொண்டு ரூ.250/-லிருந்து ரூ.350/- ஆக உயர்த்தப்படும்

73. **குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சிறை வைப்பதற்காக தயாரிக்கப்படும் புத்தகங்களுக்கான செலவுத்தொகையை ரூ.8,000/- லிருந்து ரூ.12,000/- ஆக உயர்த்தப்படும்**

எழுதுபொருள்களின் விலை உயர்வை கருத்திற்கொண்டு, குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சிறை வைப்பதற்காக தயாரிக்கப்படும் புத்தகங்களுக்கு தேவைப்படும் எழுதுபொருட்கள் வாங்கவும், ஆவணங்களை மொழிபெயர்ப்பு செய்யவும் செலவிடப்படும் தொகையை ஒவ்வொரு வழக்கிற்கும் ரூபாய் 8,000-லிருந்து ரூபாய் 12,000 ஆக உயர்த்தப்படும்.

# தடய அறிவியல் துறை

**74. திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் புதியதாக மரபணு ஆய்வுப் பிரிவு உருவாக்கப்படும்**

பெண்களுக்கு எதிராக குற்றங்கள் மற்றும் போக்ஸோ சட்டம் தொடர்பான வழக்குகள் சம்பந்தப்பட்ட சான்று பொருட்களை விரைந்து ஆய்வு செய்து தடய அறிவியல் ஆய்வறிக்கைகளை வழங்குவதன் மூலம் குற்றப்புலனாய்வில் தொய்வு ஏற்படாமல் இருக்க ஏதுவாக திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் புதியதாக மரபணு ஆய்வுப் பிரிவு ரூபாய் 10.15 கோடி செலவில் உருவாக்கப்படும்.

75. **கோயம்புத்தூர் மற்றும் இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் போதை மருந்து ஆய்வுப் பிரிவுகள் அமைக்கப்படும்**

போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு புலனாய்வாளர்களுக்கு போதைப் பொருட்களை ஆய்வு மேற்கொண்டு அதன் வகையை கண்டறியவும் அது தொடர்பான தடயவியல் ஆய்வறிக்கைகளை விரைந்து வழங்கிடவும், கோயம்புத்தூர் மற்றும் இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் புதியதாக **போதை மருந்து ஆய்வுப் பிரிவுகள் ரூபாய் 3.74 கோடி செலவில் அமைக்கப்படும்.**

**76. தடய அறிவியல் துறையில் சிறப்பாகப் பணியாற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கம் வழங்கப்படும்**

தடய அறிவியல் துறையில் பணியாற்றும் அறிவியல் அலுவலர்களின் சிறப்பான சேவைக்காக ஆண்டுதோறும் தமிழ்நாடு முதலமைச்சரின் தடய அறிவியல் சீர்மிகு பணிப்பதக்கம் வழங்கப்படுகிறது. அதுபோல இத்துறையில் சிறப்பாகப் பணியாற்றும் தொழில்நுட்ப பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் இரண்டு பணியாளர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சரின் தடய அறிவியல் பணிப் பதக்கம் ரூபாய் 25 ஆயிரம் செலவில் வழங்கப்படும்.

77. **குற்றவியல் நீதி பரிபாலன அமைப்பின் சிறப்பான செயல்பாட்டிற்காக இ- தடய தளத்தில் வழக்கு விவரங்கள் மற்றும் அறிவியல் ஆய்வறிக்கைகளை பதிவேற்றம் செய்வதற்குரிய கட்டமைப்பு தடய அறிவியல் ஆய்வகங்களில் உருவாக்கப்படும்**

நீதிமன்றங்களிலிருந்து தடயவியல் ஆய்வுக்குப் பெறப்படும் வழக்குகளின் நிலை மற்றும் ஆய்வறிக்கைகளின் விவரங்களை இ- தடய தளத்தில் பதிவேற்றம் செய்வதன் மூலம் நீதிபரிபாலன அமைப்பின் செயல்பாடு மேலும் வலுப்பெறும். ஆகவே, தடய அறிவியல் துறையின் தலைமை மற்றும் 10 வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் அதற்குரிய கட்டமைப்பு **ரூபாய் 185.80 இலட்சம் செலவில்** உருவாக்கப்படும்.

78. **தடய அறிவியல் நிபுணர்கள் காணொளி கூட்டரங்கு வாயிலாக நீதிமன்றங்களில் சாட்சியம் அளிப்பதற்குரிய உட்கட்டமைப்பை தலைமை மற்றும் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களில் உருவாக்கப்படும்**

தடய அறிவியல் நிபுணர்கள் நேரடியாக பல்வேறு நீதிமன்றங்களுக்கு சென்று சாட்சியம் அளிப்பதற்கு மாற்றாக காணொளி கூட்டரங்கு வாயிலாக சாட்சியம் அளிப்பதன் மூலம் கால விரயமின்றி மேலும் நிலுவையிலுள்ள வழக்குகளை நிபுணர்கள் குறைக்க ஏதுவாக அமையும். **ஆகவே தடய அறிவியல் துறையின் தலைமை மற்றும் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் அதற்குரிய உட்கட்டமைப்பு ரூபாய் 109 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.**

**79. விழுப்புரம், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகங்கள் ISO/IEC 17025:2017 சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தப்படும்**

சென்னை தலைமை ஆய்வகம் ISO/IEC 17025:2017 சர்வதேச தரச்சான்றிதழை 13.05.2022 அன்று பெற்றுள்ளது. இரண்டாவது கட்டமாக மதுரை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களில் தற்போது அத்தரச் சான்றிதழை விரைவில் பெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மூன்றாம் கட்டமாக விழுப்புரம், இராமநாதபுரம், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களை ISO/IEC/17025:2017-ன்படி **சர்வதேச தரத்திற்கு ரூபாய் 745 இலட்சம் (தொடர் செலவினம் ரூபாய் 20 இலட்சம், தொடராச் செலவினம் ரூபாய் 725 இலட்சம்) செலவில் மேம்படுத்தப்படும்.**

80. குற்ற வழக்குகளில் பெறப்படும் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களின் துப்பாக்கியல் ஆய்வுகளை மேற்கொள்ள துப்பாக்கி குண்டின் வேகத்தை அளவிடும் அதிநவீன கருவி வாங்கப்படும்

சென்னை தலைமை தடய அறிவியல் ஆய்வகத்தில் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களின் துப்பாக்கியியல் ஆய்வுகளைத் தடையின்றி மேற்கொள்ள ஏதுவாக அதிநவீன துப்பாக்கி குண்டின் வேகத்தை அளவிடும் கருவி ஒன்று ரூபாய் 50 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

# தீயணைப்பு மற்றும்
# மீட்புப் பணிகள் துறை

## I. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் நிறுவுதல்

81. நான்கு இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் நிறுவப்படும்

காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவெறும்பூர், திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் ஆகிய நான்கு இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் தலா ரூபாய் 181.32 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூபாய் 725.28 இலட்சம் செலவினத்தில் நிறுவப்படும்.

**82. திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மண்டலம் உருவாக்கப்படும்**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் நிர்வாக சீரமைப்பின் ஒரு பகுதியாக மதுரையை தலைமையிடமாகக் கொண்ட தென்மண்டலத்தினை இரண்டாகப் பிரித்து **திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு புதிய மண்டலம் ஒன்று உருவாக்கப்படும்.**

## II. வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல்

83. **தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் பயன்பாட்டிற்காக 35 நீர்தாங்கி வண்டிகள் (Water Tenders) கொள்முதல் செய்யப்படும்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கான அடிப்படை அலகாகக் கருதப்படுவது நீர்தாங்கி வண்டிகளாகும். இவற்றின் தேவையைக் கருத்திற்கொண்டு 35 நீர்தாங்கி வண்டிகள் (Water Tenders) தலா ரூபாய் 75.00 இலட்சம் என்ற அளவில் மொத்தம் ரூபாய் 26.25 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

84. **தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் பயன்பாட்டிற்காக 27 பெரும தண்ணீர் லாரிகள் (Water Bowzers) கொள்முதல் செய்யப்படும்**

பெருந்தீ விபத்துக்களின் போது தேவைப்படும் அதிக அளவிலான தண்ணீர் தேவையினை கருத்தில் கொண்டு 27 **பெரும தண்ணீர் லாரிகள் (Water Bowzers) தலா ரூபாய் 70.00 இலட்சம் என்ற அளவில் மொத்தம் ரூபாய் 18.90 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.**

85. **தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாவட்ட அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களின் பயன்பாட்டிற்காக புதிதாக 7 ஈப்புகள் (Jeeps) கொள்முதல் செய்யப்படும்**

அவசர காலங்களில் முதன்மைப் பொறுப்பாளர்களாகப் பணிபுரியும் அலுவலர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து செல்ல ஏதுவாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மாவட்ட அலுவலர்கள் மற்றும் மண்டல அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 7 **ஈப்புகள் (Jeeps) தலா ரூபாய் 8.47 இலட்சம் என்ற அளவில் மொத்தம் ரூபாய் 59.26 இலட்சம் மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.**

86. **கடற்கரைப் பகுதியில் ரோந்து மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ள மூன்று அனைத்து நிலப்பரப்பு வாகனங்கள் (All Terrain Vehicle) கொள்முதல் செய்யப்படும்**

கடல் அலையில் சிக்குபவர்களை விரைந்து சென்று மீட்கவும், கடற்கரைப் பகுதியில் ரோந்து மற்றும் மீட்புப் பணிகளை மேற்கொள்ளவும் திருச்செந்தூர், வேளாங்கன்னி மற்றும் கன்னியாகுமரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு ஒரு ஊர்தியின் விலை ரூபாய் 16.00 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூபாய் 48.00 இலட்சம் செலவில் 3 அனைத்து நிலப்பரப்பு வாகனங்கள் (All Terrain Vehicle) வாங்கப்படும்.

**87. புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களின் பயன்பாட்டிற்காக உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும்**

புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அவசரகால பதில் செயல்பாடு ஆதார அமைப்புடன் (ERSS) (நாடு முழுவதுமான எண் 112) ஒருங்கிணைந்து திறம்பட செயலாற்றும் வகையில் அந்நிலையங்களின் பயன்பாட்டிற்காக 27 கணிணிகள் மற்றும் 14 மொபைல் டேட்டா டெர்மினஸ் (Mobile Data Terminus (Rugged Tablet)) ஆகியவை ரூபாய் 37.90 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்படும்.

## III. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களை மேம்படுத்துதல்.

**88. சென்னை புறநகர் மாவட்டம், பூந்தமல்லி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் மேம்படுத்தப்படும்**

மக்கள் தொகை வளர்ச்சி, விரைவான தொழில்மயமாக்கல் ஆகியவற்றைக் கருத்தில் கொணடு சென்னை புறநகர் மாவட்டம், பூந்தமல்லி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் ரூபாய் 79.30 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.

**89. மத்திய சென்னை மாவட்டம், கீழ்ப்பாக்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் மேம்படுத்தப்படும்**

அதிகரித்து வரும் மக்கள் தொகையினைக் கருத்தில் கொண்டு மத்திய சென்னை மாவட்டம், கீழ்ப்பாக்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் **ரூபாய் 79.30 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும்.**

90. **தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரகத்தில் உள்ள அவசரகால கட்டளை மையம் (Incident Command Centre) வலுப்படுத்தப்படும்**

**தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் சேவைகளை சரியான நேரத்தில் முடுக்கிவிட ஏதுவாக இயக்குநரகத்தில் உள்ள அவசரகால விபத்து கட்டளை மையம் (Incident Command Centre) ரூபாய் 354 இலட்சம் செலவினத்தில் நவீனப்படுத்தப்படும்.**

## IV. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல்.

**91. திருவல்லிக்கேணி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்**

திருவல்லிக்கேணி தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்கு ரூபாய் 594.38 இலட்சம் செலவினத்தில அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும்.

**92. சேலம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்**

**சேலம்** தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்கு ரூபாய் 608.00 இலட்சம் செலவினத்தில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும்.

**93. ஸ்ரீரங்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படும்**

ஸ்ரீரங்கம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்கு ரூபாய் 485.51 இலட்சம் செலவினத்தில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் ஒன்று கட்டப்படும்.

## V. கட்டடப் பராமரிப்புப் பணிகளுக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்தல்.

94. **தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளின் பராமரிப்புப் பணிகளுக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் கட்டடங்கள் மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகளின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புப் பணிகளுக்காக தற்போது ஆண்டுதோறும் ஒதுக்கப்படும் ரூபாய் 2.04 கோடியுடன் மேலும் ரூபாய் 2.00 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**95. தீயணைப்புப் பணியாளர்களின் சேமநல நிதிக்கான மானியம் (Benevolent Fund) உயர்த்தி வழங்குதல்**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு தற்போது அரசால் வழங்கப்படும் சேமநல நிதிக்கான (Benevolent Fund) மானியம் ரூபாய் 20.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 40.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

**96. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் மண்டல மற்றும் மாநில அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கான செலவினத் தொகையின் உச்சவரம்பு உயர்த்தப்படும்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் மண்டல அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கு தற்போது ஒவ்வொரு மண்டலத்திற்கும் வழங்கப்பட்டு வரும் செலவினத் தொகை தலா ரூபாய் 1.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.00 இலட்சமாக மும்மடங்கு உயர்த்தப்படும். மேலும், மாநில அளவில் நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் செலவினத் தொகை ரூபாய் 3.00 இலட்சம் இருமடங்கு உயர்த்தப்பட்டு ரூபாய் 6.00 இலட்சமாக வழங்கப்படும்.

97. **தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் காப்பீட்டு இடர் பாதுகாப்பு தொகை (Insurance Risk Coverage)உயர்த்தி வழங்கப்படும்**

காவல் துறைப் பணியாளர்களுக்கு காப்பீட்டு இடர் பாதுகாப்புத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதற்கு இணையாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கான காப்பீட்டு இடர் பாதுகாப்புத் தொகை (Insurance Risk Coverage) கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படும்.

| பதவி | தற்போதைய வரம்பு | உயர்த்தப்படும் வரம்பு |
|---|---|---|
| தீயணைப்போர் முதல் உதவி மாவட்ட அலுவலர் வரை | 2 இலட்சம் | 4 இலட்சம் |
| மாவட்ட அலுவலர், துணை இயக்குநர் மற்றும் இணை இயக்குநர் வரை | 4 இலட்சம் | 8 இலட்சம் |
| கூடுதல் இயக்குநர் | ----- | 10 இலட்சம் |
| தலைமை இயக்குநர் | 10 இலட்சம் | 20 இலட்சம் |

**98. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மெரினா மீட்புப்பணிகள் நிலைய பணியாளர்களுக்கு இடர்ப்படி வழங்கப்படும்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மெரினா மீட்புப்பணிகள் நிலையத்தில் பணிபுரியும் 14 பணியாளர்களுக்கு இடர்ப்படி ரூ.6000/- ஆக வழங்கப்படும். இதற்கான தொடர் செலவினம் ரூபாய் 10.08 இலட்சம் ஆகும்.

**99. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைப் பணியாளர்களுக்கு கட்டப்படும் குடியிருப்புகளின் கட்டடப் பரப்பளவு Plinth Area) அதிகப்படுத்தப்படும்**

காவல் துறைப் பணியாளர்களுக்கான குடியிருப்புகளின் கட்டடப் பரப்பளவு அதிகப்படுத்தி வழங்கப்பட்டுள்ளதற்கு இணையாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்குக் கட்டப்படும் குடியிருப்புகளின் கட்டடப் பரப்பளவு கீழ்க்கண்டவாறு அதிகரிக்கப்படும்.

| பதவி | தற்போதைய பரப்பளவு (சதுர அடி) | உயர்த்தப்படும் பரப்பளவு (சதுர அடி) |
|---|---|---|
| தீயணைப்போர் / முன்னணித் தீயணைப்போர் / தீயணைப்போர் ஓட்டுநர்/ இயந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 650 | 750 |
| நிலைய அலுவலர்/ நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 724 | 850 |
| மாவட்ட அலுவலர் | 843 | 1000 |
| துணை இயக்குநர்/இணை இயக்குநர் | 1273 | 1500 |

## VII. புதிய முயற்சிகள்

100. **நடைமுறையில் உள்ள பாதுகாப்பு தன்னார்வ தொண்டர்கள் திட்டத்தை வலுப்படுத்த தன்னார்வலர்களுக்கு அடையாள வில்லை (Badge) மற்றும் மதிப்பூதியம் (Honororium) வழங்கப்படும்**

பாதுகாப்பு தன்னார்வலர்களின் சேவைகளைப் பெருக்கவும், அவர்களை ஊக்குவிக்கவும், மாநிலம் முழுவதிலும் பல ஆண்டுகளாக தன்னார்வலர்களாகப் பணியாற்றி வரும் 200 நபர்களை தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நடவடிக்கைகளில் முறையாக பயிற்சி அளிக்கவும், அடையாளவில்லை மற்றும் மதிப்பூதியம் வழங்கவும் ரூபாய் 76.35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## VIII. புதிய பணியிடம் உருவாக்குதல்

**101. காவல் துறை தலைமை இயக்குநர்/ இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைக்காக சட்ட விவகாரங்களில் உதவிட இயக்குநரகத்தில் சட்ட ஆலோசகர் என்ற புதிய பணியிடம் உருவாக்கப்படும்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்குகளில் உறுதி ஆவணம் தயாரித்தல், முக்கிய பிரச்சினைகளில் சட்டக் கருத்தை வழங்குதல் மற்றும் நீதிமன்றங்களில் அரசு கூடுதல் தலைமை வழக்குரைஞர், அரசு வழக்குரைஞர் ஆகியோர்களுக்கு உதவுதல் ஆகிய சட்ட விவகாரங்களில் உதவிட சட்ட ஆலோசகர் என்ற புதிய பணியிடம் ஒன்று தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரகத்தில் உருவாக்கப்படும்.

**மு.க. ஸ்டாலின்**

**முதலமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.